From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 173/2009

Deposition of witness for: PW -1

| | | | |
|---|---|---|---|
| Name | : Mallika | Father/Husband Name | : Manickavasagam |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 10.04.18 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் நாவினிப்பட்டியில் வசிக்கிறேன். வீட்டுக்குடித்தனம் செய்கிறேன். எதிரிகளை தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இரவு 9.00 மணிக்கு எனது வீட்டின் முன்பு கல்லில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது 1ம் எதிரி விலக்குமாறை வைத்து என் உடம்பில் அடித்தார். 2ம் எதிரி கையால் என் கண்ணத்தில் காதோடு சேர்த்து அடித்தார். கொன்றுவிடுவேன் ஒழுங்காக இருந்துகொள் என்று சொன்னார்கள். அங்கிருந்த சிலர் விலக்கி விட்டார்கள். பிறகு சென்னையில் இருந்த என் கணவருக்கு தகவல் சொல்லி, அவர் வந்ததும் மறுநாள் காவல் நிலையம் சென்று எதிரிக்ள மீது புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகார் அ.சா.ஆ1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

எதிரிகள் இருவரும் எனது தெருவில் குடியிருக்கிறார்கள். எதிரிகளின் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையில் நிறைய வீடுகள் உள்ளன. நான் கொடுத்த புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து வருவதாக சொன்னேன். நான் குடியிருக்கும் தெருவை பள்ளிவாசல் தெரு என்று சொல்வார்கள். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் நான் வேண்டுமென்று எனது கணவரின் தூண்டுதலின் பேரில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி விலக்குமாறால் அடித்ததாகவும், 2ம் எதிரி

கையால் அடித்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் SSLC படித்திருக்கிறேன். நான் கொடுத்த புகாரில் என் கணவரும் கையெழுத்து போட்டிருக்கிறார். என் வீட்டிற்கு முன்பு 2, 3 இடத்தில் நான் உட்கார்ந்திருந்த கல் போன்று கற்கள் பதிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிரியின் வீடு நான் இருக்கும் வீதியில் முதல் வீடு. எனது வீடு கடைசி வீடு. சம்பவம் நடக்கும்போது ஆட்கள் இருந்தார்கள். முதல் வீட்டில் இருந்து 1ம் எதிரி 5 வீடு தள்ளி வந்து அடித்தாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும் எனக்கும் பேச்சு வார்த்தை கிடையாது என்றும் ஏற்கனவே வாய் தகராறு உண்டு என்றால் சரியல்ல. 2ம் எதிரி 1ம் எதிரியின் மருமகன். சம்பவம் நடந்த தேதியில் 2ம் எதிரி சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும், ஒத்தக்கடையில் இருந்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அவசரத்தில் எனது வீட்டிற்கு முன்பு வந்தபோது கல் இடறி நான் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை:

இல்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 173 /2009

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Manickavasagam | Father/Husband Name | : Vellaikannu |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 10.04.18 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

**முதல் விசாரணை:**

நான் நாவினிப்பட்டியில் வசிக்கிறேன். நான் வேன் டிரைவராக இருந்தேன். நான் தற்போது ஆட்டோ டிரைவராக இருக்கிறேன். அ.சா.1 என் மனைவி. எதிரிகளை தெரியும். 29.08.2008ம் தேதி இரவு 9.00 மணிக்கு எங்கள் வீட்டில் வாசல் முன்பு இருந்த என் மனைவியை 1ம் எதிரி விலக்குமாறால் அடித்து அசிங்கமாக பேசியதாகவும், 2ம் எதிரி என் மனைவியின் கண்ணத்திலும் தலையிலும் கையால் மாறி மாறி அடித்து சட்டையை கிழித்து விட்டதாகவும், சென்னையில் இருந்த எனக்கு என் மனைவி போன் மூலம் தகவல் சொன்னார். நான் மறுநாள் காலை வீட்டிற்கு வந்து என் மனைவியை அழைத்துக் கொண்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது. புகார் கொடுப்பதற்கு நானும் என் மனைவியும் காவல் நிலையம் சென்றோம். புகாரில் நான் கையொப்பம் செய்யவில்லை. போலீசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள். நானும் எனது மனைவியும் பள்ளிவாசல் தெருவில் குடியிருப்பதாக போலீசாரிடம் சொன்னோம். நான் பள்ளிவாசல் தெரு காலனியில் குடியிருக்கிறேன். 1ம் எதிரிக்கும் எனக்கும் நீண்ட நாட்களாக பேச்சு வார்த்தை கிடையாது. எனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், போலீஸ் என்னை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கிழிந்த சட்டையை போலீசாரிடம் கொடுக்கவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:**

இல்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 173 /2009

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Arumugam | Father/Husband Name | : Palani |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 10.04.18 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் நாவினிப்பட்டியில் வசிக்கிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அச.ா.1ஐ தெரியும். எதிரிகளை தெரியும். சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது. என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

அரசுதரப்பில் இந்த சாடசியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டப்பட்டது. சாட்சியின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களைபரிசீலனை செய்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154ன்கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

குறுக்கு விசாரணை அரசுதரப்பில்:

போலிசார் விசாரணையில் 29.08.08ம் தேதி இரவு சுமார் 9.00 அளவில் அ.சா.1 அவரது வீட்டின் முன்பு இருந்தபோது எதிரிகள் இருவரும் அங்கு வந்து அ.சா.1. ஐ பார்த்து அசிங்கமாக பேசியும். 1ம் எதிரி விலக்குமாற்றால் அ.சா.1 ஐ அடித்தும், 2ம் எதிரி கையால் அ.சா.1ஐ கண்ணத்திலும் காதிலும் மாறி மாறி அடித்ததாகவும், அப்போது விலக்கி விடுவதற்காக நானும், லெட்சுமி மற்றும் வெள்ளைச்சாமி ஆகியோர் வந்தபோது எங்களை பார்த்ததும் எதிரிகள் சென்றுவிட்டார்கள் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு சாதகமாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 173 /2009

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Lakshmi | Father/Husband Name | : Pitchaimani |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 10.04.18 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் நாவினிப்பட்டியில் வசிக்கிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அச.ா.1ஐ தெரியும். எதிரிகளை தெரியும். சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது. என்னை போலீசார் விசாரித்தார்கள்.

அரசுதரப்பில் இந்த சாடசியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டப்பட்டது. சாட்சியின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களைபரிசீலனை செய்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154ன்கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

குறுக்கு விசாரணை அரசுதரப்பில்:

போலிசார் விசாரணையில் 29.08.08ம் தேதி இரவு சுமார் 9.00 அளவில் அ.சா.1 அவரது வீட்டின் முன்பு இருந்தபோது எதிரிகள் இருவரும் அங்கு வந்து அ.சா.1. ஐ பார்த்து அசிங்கமாக பேசியும். 1ம் எதிரி விலக்குமாற்றால் அ.சா.1 ஐ அடித்தும், 2ம் எதிரி கையால் அ.சா.1ஐ கண்ணத்திலும் காதிலும் மாறி மாறி அடித்ததாகவும், அப்போது விலக்கி விடுவதற்காக நானும், ஆறுமுகம் மற்றும் வெள்ளைச்சாமி ஆகியோர் வந்தபோது எங்களை பார்த்ததும் எதிரிகள் சென்றுவிட்டார்கள் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு சாதகமாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 173 /2009

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Jeyanthi | Father/Husband Name | : Alagarsami |
| Caste | : | Calling | : Doctor |
| Religion | : | Age | : |
| Date | : 24.09.18 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் தற்போது மேலூா் அரசு மருத்துவமனையில் முதுநிலை குடிமையியல் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 30.08.08ம் தேதி மதியம் 02.15 மணிக்கு மேலூா் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது 40 வயதுடைய மல்லிகா என்பவா் தன்னை தெரிந்த நபா்கள் விலக்குமாறால் அவருடைய வீட்டில் வைத்து 29.08.08ம் தேதி இரவு 09 மணிக்கு அடித்ததாக கூறினாா். அவா் தனக்கு இடது காதில் வலி இருப்பதாகவும், வலது தாடையில் வலி இருப்பதாகவும், உடம்பு முழுவதும் வலி இருந்ததாகவும் கூறினாா். அவரை பரிசோதித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். அந்தச்சான்று அ.சா.ஆ.2 ஆகும். போலீசாா் என்னை விசாரித்தனா்.

குறுக்கு விசாரணை:

கண்ணத்திலும், தாடையிலும் உடல் முழுவதும் வலி இருப்பதாக பாசாங்கு செய்யலாம் என்றால் சரிதான். விலக்குமாற்றால் அடிக்கும்போது கீரல் ஏற்பட வாய்ப்புண்டு. மேற்கண்ட நபருக்கு கீரல் காயம் எதுவுமில்லை. வெளிக்காயங்கள் எதுவுமில்லை.

மறு விசாரணை: இல்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 173 /2009

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Senthivel | Father/Husband Name | : Alagan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 24.09.18 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் நாவினிப்பட்டியில் வசிக்கிறேன். லாரி ஓட்டுநராக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடயதுதான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் மெச்சி வீட்டின் முன்பு வைத்து போலீசார் அங்கு வந்து நானும் சந்திரனும் இருக்கும்போது சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார்செய்தனர். அதில் சாட்சியாக நானும் சந்திரனும் சையெழுத்து செய்தோம். பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

போலீசார் என்னிடம் வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்கள். இரண்டு அல்லது ஒரே பேப்பரில் கைெயழத்து வாங்கினார்களா என்று ஞாபகமில்லை. அதில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது. சம்பவத்தை பற்றிய விவரம் எனக்கு தெரியாது. உள்ளுர்க்காரர் என்பதால் அவர்கள் கேட்டதன்பேரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். கூலிவேலை செய்யவில்லை. கூலிவேலை செய்வதாக சொன்னால் அது தவறு. வாதி மல்லிகா எனது உறவினர்.

மறு விாரணை: இல்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 173 /2009

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : Chandran | Father/Husband Name | : Sevukan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 24.09.18 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் நாவினிப்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடயதுதான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக சம்பவ இடத்தில் வைத்து போலீசார் அங்கு வந்து நானும் சந்திரனும் இருக்கும்போது சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார்செய்தனர். அதில் சாட்சியாக நானும் செந்திவேல் சையெழுத்து செய்தோம். ˙. போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

போலீசார் என்னிடம் வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்கள். அந்த பேப்பரில் என்ன வரைந்தார்கள் என்று தெரியாது. சம்பவத்தை பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

மறு விரணை: இல்லை.